# தொகுதி மறுவரையறை: தமிழ்நாடெங்கும் கருப்புக்கொடிப் போராட்டம்!



விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் ஒன்றிய அரசு கொண்டு வரும் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்த்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம்சிகாமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். உடன் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், கோபிகிருஷ்ணன், குணா மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டையும் தென் மாநிலங்களையும் வஞ்சிக்கும் நோக்கில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவரத் துடிக்கும் தொகுதி மறுவரையறை சட்டத்தைக் கண்டித்து, குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, நடுவீரப்பட்டு பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி தோழர்களோடு கருப்பு உடை அணிந்து, கருப்புக்கொடி காட்டி கண்டன முழக்கம் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாநில உரிமைகளை முடக்கி, இந்திய கூட்டாட்சியைச் சிதைக்க முயலும் பாசிச பா.ஜ.க.வின் தொகுதி மறுவரையறைக்கு எதிராக குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கருப்புக்கொடி ஏற்றி கண்டன முழக்கங்களை எழுப்பினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளைச் செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடம் கழக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் கருப்பு சட்டை அணிந்து தொகுதி மறு சீரமைப்பு நகலை எரித்து ஆட்டோவில் ஆவடி பட்டாபிராம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார் அருகில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர பகுதி செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் வார்டு கழகச் செயலாளர்கள் கழக இந்நாள் முன்னாள் மூத்த முன்னோடிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் உள்ளனர்



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தொகுதி மறு வரையறை தமிழ்நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து கருப்புக் கொடி போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். அதன் தொடர்ச்சியாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தின் முன்பு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ கருப்புக் கொடி ஏந்தி கண்டன முழக்கமிட்டார் உடன் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் காஞ்சிபுரம் வி.எஸ்.ராமகிருஷ்ணன், உத்திரமேரூர் பா.கார்த்திகேயன் மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் ஆறுமுகம் மற்றும் பகுதி செயலாளர்கள் மாநகர நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வரவுள்ள கருப்புச் சட்டத்துக்கு எதிராக, தலைமைக் கழக அறிவிப்பின் படி திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் நாராயணாபுரம் கிராமத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி. எஸ்.சந்திரன் தலைமையில் கருப்புக் கொடியை ஏந்தி கருப்புச் சட்டத்திற்கு எதிராக முழக்கமிட்டனர். இந்நிகழ்வில் திருத்தணி சட்டமன்றத் தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் சி.என்.சண்முகம், பா.சம்பத், மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.



தொகுதி மறு வரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து திருவள்ளூர் மணவாள நகர் அண்ணா சிலை அருகில் திருவள்ளூர் திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் திராவிட பக்தன்,கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே. அரிகிருஷ்ணன் முன்னிலையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாநில மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.டி.ஆதிசேஷன், பி.கே.நாகராஜ், கே.ஏ.மதியழகன், கே.செங்குட்டுவன், கொப்பூர் திலீப்குமார், ஆர். மோகனசுந்தரம், டி.ஆர்.திலீபன் உட்பட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### இராயபுரம் சட்டமன்ற தொகுதியின் கழக வெற்றி வேட்பாளர்

## டாக்டர் அ.சுபேர் கானை ஆதரித்து மு.க.தமிழரசு பிரச்சாரம்!

### இராயபுரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் இரா.செந்தில்குமார் அறிவிப்பு!

சென்னை,ஏப்.17-

இராயபுரம் சட்ட மன்ற தொகுதி தி.மு. கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் டாக்டர் அ.சுபேர் கான் அவர்களை ஆதரித்து மு.க.தமிழரசு அவர்கள் வீதி வீதியாக மக்களைச் சந்தித்து 'உதயசூரியன்' சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் சட்டமன்ற தொகுதி கிழக்கு பகுதிக்குட்பட்ட 50 வது வட்டம் மற்றும் 49-அ வது வட்டம் ஆகிய பகுதிகளில் தீவிர பிரச்சா ரத்தில் ஈடுபடுகிறார்.

இந்நிகழ்ச்சியை தொகுதி பார்வையாளர் திரு. கலாநிதி வீராசாமி எம்.பி, சட்டமன்ற உறுப் பினர் ஐட்ரீம்ஸ் இரா. மூர்த்தி, தலைமை செயற் குழு உறுப்பினர்கள் தா. இளைய அருணா, நா. மனோகரன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

வட்ட கழகச் செயலா ளர்கள் ஆர்.வி.கணேஷ், மற்றும் காட்டன்.சதிஷ் ஆகியோர் முன்னிலை யில் நடைபெறும் பிரச்சா ரத்திற்கு, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நிர் வாகிகள் மற்றும் கழக நிர் வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ளவிருக் கின்றனர் என பகுதிக் கழ கச் செயலாளர் இரா. செந்தில்குமார் தெரிவித் துள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் தலைமைச் செயலகத்திற்கு எதிரில் உள்ள பூங்காவில் நடை பயிற்சி மேற்கொள்ளும் பார்க் வாக்கர்ஸ் அசோசியேஷன் உறுப்பினர்களிடம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளருமான பி கே சேகர்பாபு கழக ஆட்சி சென்னை மாநகரில் உள்ள பூங்காக்களை சீரமைக்க கொண்டு வந்த திட்டங்களை எடுத்துச் சொல்லி வாக்கு சேகரித்தார் இந்த வாக்கு சேகரிப்பில் பகுதி செயலாளர்கள் எஸ் ராஜசேகர், எஸ். முரளி, இரா.நரேந்திரன், பார்க் வாக்கர்ஸ் அசோசியேஷன் செயலாளர் யோகா மாஸ்டர் சீனிவாசலு தலைவர் முரளி, ரமேஷ், தினகரன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

### சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 17.4.2026 | சென்னை மேற்கு | சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி |
| | சென்னை கிழக்கு | துறைமுகம் |
| | " " | திரு.வி.க.நகர் |
| | " " | கொளத்தூர் |
| | " " | வில்லிவாக்கம் |
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.